*1*

# வாழ்த்து: ஆவியானவரால் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்கு

## (1:1, 2)

*அப்போஸ்தலர் தமது நிருபத்தை முறைப்படி தொடங்கினார். அவர் தம்மை ஒரு அமைதலான, ஆடம்பரமற்ற முறையில் தம்மை அடையாளப்படுத்திக்கொண்டார். இதன் எழுத்தாளர், தாம் எழுதுவது கேட்கப்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பதை, இந்த சுய அடையாளப்படுத்துதலும் கண்ணியமான திறவு வசனங்களும் தெளிவாக்குகின்றன. அவரது வார்த்தைகள் கட்டளையிடும் வகையைச் சேர்ந்தவையல்ல; அவர் தம்மை (பிறர்) தனிப்பட்ட முறையில் பின்பற்றுதலுக்காகவோ அல்லது தம் அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்காகவோ எழுதவில்லை. சபையை ஊக்குவிப்பதற்காகவும், தொடர்ந்து ஏற்பட்ட துன்பத்தைக் கையாள்வதற்கு ஆதார மூலங்களை அவர்களுக்கும் கொடுப்பதற்காகவும், கிறிஸ்துவின் மீதான விசுவாசத்தை மறுவலியூட்டுவதற்காகவும், வாழ்வில் பரிசுத்தத்தை ஏவுவதற்காகவும் அவர் இந்த நிருபத்தை எழுதினார். நிருபத்தின் துவக்கவரிகள், தொடர்ந்து வருபவைகளுக்கு அடித்தளத்தை அமைக்கின்றன.*

### *தொடக்க வாழ்த்து (1:1, 2)*

***1இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பேதுரு, பொந்து, கலாத்தியா, கப்பத்தோக்கியா, ஆசியா, பித்தினியா தேசங்களிலே சிதறியிருக்கிறவர்களில், 2பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே, ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே, கீழ்ப்படிதலுக்கும், இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தந்தெளிக்கப்படுதலுக்கும் தெரிந்துகொள்ளப்பட்ட பரதேசிகளுக்கு எழுதுகிறதாவது; கிருபையும் சமாதானமும் உங்களுக்குப் பெருகக்கடவது.***

***வசனம் 1.*** *எழுத்தாளர் தம்மை இரு வகைகளில் அடையாளப்படுத்திக் கொண்டார்:* ***இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர்*** *மற்றும்* ***பேதுரு.*** *அவரது பிறப்புப் பெயர் சீமோன் அல்லது மிகவும் ஏற்புடைய வகையில் சிமியோன் என்பதாக இருந்தது (நடபடிகள் 15:14; 2 பேதுரு 1:1 இது பழங்காலத்திய கிரேக்கக் கையெழுத்துப் பிரதிகள் சிலவற்றில் உள்ளது), இது யூதர்களின் மத்தியில் ஒரு பொதுவான பெயராக இருந்தது. இதே பெயர் கொண்ட மற்றவர்களில் இருந்து அவரை வித்தியாசப்படுத்துவதற்காக, அவர்*

யோனாவின் மகனான சீமோன் என்று அழைக்கப்பட்டார் (பர்யோனா; மத்தேயு 16:17), (யோவான் 1:42). இந்த அப்போஸ்தலரின் முந்திய தலைமுறைகள் பற்றி இதைவிட அதிகமாக வேறொன்றையும் நாம் அறிவதில்லை.

மனித வலிமைக்குள் பண்பு வாய்ந்த உட்கண்ணோக்குடன், இயேசு முதன்முறையாக சீமோனைச் சந்தித்தபோது, அவருக்கு ஒரு புதிய பெயரைக் கொடுத்தார். இவரை "கேபா" என்று இயேசு அழைத்தார் (யோவான் 1:42). "கேபா" என்ற அரமாயிக் வார்த்தையை கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கும்போது "பேதுரு" என்றாயிற்று. இயேசு தமிழ் மொழிபேசியிருந்தால் அவரை (பேதுருவை) "பாறை" அல்லது "கல்" என்று அழைத்திருப்பார். நியாயப்பிரமாணத்திலும் சங்கீதங்களிலும் தேவனை ஒரு கன்மலை (பாறை) என்று இஸ்ரவேல் மக்கள் கூறினர்.[1] தேவன் நிலையானவராக, நம்பகமானவராக, மாறாதவராக இருக்கிறார். கந்தல் உடுத்திய, பாங்கற்ற நிலையற்ற இந்தக் கலிலேய மீனவர், எவ்வாறு மாறக்கூடும் என்பதை இயேசு உணர்ந்து அறிந்தார். இயேசுவின் பிரசன்னத்திற்கு வந்த பின்பு, யோனாவின் மகனான சீமோன், பலம் மற்றும் நிலைப்புத்தன்மையின் பாறையாக மாற்றப்படுவார். யோனாவின் மகனாகப் பிறந்த சீமோன் என்ற இம்மனிதர், தம்மைப் பேதுரு என்று அடையாளப்படுத்தியதில் மகிழ்ச்சியடைந்தார். அவரது வாசகர்கள் அவரை இப்பெயரால்தான் அறிந்திருந்தனர்.

பேதுரு தமது இரண்டாம் நிருபத்தில் தம்மை, "இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனும் அப்போஸ்தலனுமாகிய சீமோன் பேதுரு" என்று அடையாளப்படுத்திக் கொண்டார் (2 பேதுரு 1:1). பவுலும் கூட சில வேளைகளில் இதே வார்த்தைகளைக் கொண்டு தம்மை விவரித்தார் (ரோமர் 1:1; தீத்து 1:1). பேதுரு தமது முதலாம் நிருபத்தைத் தொடங்குகையில், "இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலன்" என்று தம்மைப் பற்றிக் கூறுதல் அவருக்குப் போதுமானதாக இருந்தது. இயேசு, இந்த உலகத்தில் தமது சாட்சிகளாகவும் பிரதிநிதிகளாகவும் இருக்கும்படி அறிவுறுத்த மற்றும் கட்டளையிடப் பன்னிரெண்டுபேரைத் தம்மைச் சுற்றிலும் ஒன்றுகூட்டினார் (லூக்கா 6:13). இந்தப் பன்னிரண்டு பேருக்கு "அப்போஸ்தலர்கள்" என்ற பட்டப்பெயரை மத்தேயுவும் மாற்குவும் ஆளுக்கு ஒருமுறை மாத்திரமே குறிப்பிட்டனர் (மத்தேயு 10:2; மாற்கு 6:30). இவ்வார்த்தை லூக்கா சுவிசேஷத்தில்தான் அடிக்கடி காணப்படுகிறது. இந்தப் பன்னிரண்டு பேரும் இயேசுவுக்கு சாட்சிகளாக, குறிப்பாக அவரது உயிர்த்தெழுதலுக்குச் சாட்சிகளாகத் தோன்றிய இடத்தில், "அப்போஸ்தலர்கள்" என்று பொதுவாக அழைக்கப்பட்டுள்ளனர் (நடபடிகள் 1:8; 2:32; 3:15). பேதுரு தமது முதலாம் நிருபத்தில், தாம் வெறுமையான கல்லறையையும் உயிர்த்து எழுந்திருந்த கர்த்தரையும் கண்டிருந்ததை மறவாது குறிப்பிட்டார் (5:1).

இந்த நிருபத்தின் முதல் வாசகர்களுக்கு, பேதுரு ஒரு அப்போஸ்தலராக இருந்தார் என்பதை நினைவூட்டுதல் மிக அரிதாகவே தேவைப்பட்டது. கிறிஸ்தவ வட்டாரங்களில் ஒரே ஒரு பாறை தான் இருந்தார். அவர் யார் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். பேதுரு தம்மை ஒரு அப்போஸ்தலன் என்று குறிப்பிட்டபோது, அவர் தாமும் மற்றவர்களும் தங்கள் அருகில் இயேசு

இருக்க, கலிலேயாவில் சுற்றித்திரிந்த ஆண்டுகளைப் பின்னோக்கித் தமது நினைவில் அக்காலத்தைச் சென்று அடைந்தார். பேதுருவின் வார்த்தைகள் வரலாற்றில் வேரூன்றி இருக்கின்றன. இயேசு ஒரு கண்டுபிடிப்பாகவோ, கற்பனைத் தோற்றமாகவோ, உடலற்ற கருத்தாகவோ இருக்கவில்லை. அவர் மாம்சமும் இரத்தமும் உடையவராயிருந்தார். அப்போஸ்தலர் என்ற வகையில் அவர் (பேதுரு) இயேசுவுடன் இருந்திருந்தார். பேதுரு, அவரது (இயேசுவின்) வார்த்தைகளைக் கேட்டு, அவரைக் கண்டு, மற்றும் அவர் (இயேசு) ஒரு தொழுநோயாளியைத் தொட்டு குணமாக்கியதைக் கண்டிருந்தார், மற்றும் அவர் (இயேசு) சிலுவையில் அறையப்பட்டதற்கும், அவரது உயிர்த்தெழுதலுக்கும் சாட்சியாக இருந்தார். இது உண்மையாய் இருந்ததாலும் இயேசு தமது அப்போஸ்தலர்களுக்கு ஊழியக் கட்டளை ஒன்றைக் கொடுத்திருந்ததாலும், பேதுருவின் வார்த்தைகள் அதிகாரம் உள்ளவையாக இருந்தன. இந்த அப்போஸ்தலர், தமது நிருபமானது தேவனுடைய மக்களை உருப்படுத்தும்படி எதிர்பார்த்தார். நூற்றாண்டுகளினூடே இது அவர்களைத் தொடர்ந்து உருப்படுத்தி வருகிறது. உண்மைக் கருத்தில், பேருதுவின் வார்த்தைகள் தேவனுடைய வார்த்தைகளாக உள்ளன.

**பொந்து, கலாத்தியா, கப்பத்தோக்கியா, ஆசியா, மற்றும் பித்தினியா** ஆகிய ரோமானிய மாகாணங்களில் வாழ்ந்த சீஷர்களைப் பேதுரு தமது நிருபத்தில் குறிப்பிட்டார். பொந்துவும் பித்தினியாவும் தெளிவாய்க் குறிப்பிடப்பட்ட பூகோள ரீதியிலான இரண்டு மாகாணங்களாக இருந்த போதிலும், இவற்றை ரோமர்கள் ஒரே மாகாணமாக ஒன்றிணைத்திருந்தனர், மேற்கூறப்பட்ட ஐந்து பெயர்களும், ரோமானியர்கள் நிர்வாக மாவட்டங்கள் நான்கையே குறிப்பிட்டன. இந்த நான்குமே பெரிய மாகாணங்களாக இருந்தன. இவையாவும் ஒன்று சேர்ந்து, ஏறக்குறைய ஆசியா முழுவதையும் அல்லது நவீன காலத்திய துருக்கி நாட்டின் முழு நிலப்பகுதியையும் கொண்டிருந்தன. (இப்பகுதி பற்றிய அதிகமான தகவல்களுக்கு, *அறிமுகப் பாடத்தைப்* பார்க்கவும்.)

பேதுரு இந்த நிருபத்தை எழுதிய காலமான மத்திய 60 களில், ஆசியா மைனர் பகுதியில் எத்தனை சபைக் குழுமங்கள் இருந்தன அல்லது எவ்வளவு கிறிஸ்தவர்கள் இருந்தனர் என்பது தெளிவாகத் தெரிவதில்லை. ஆசியாவின் மாகாணத்தில் பல நூற்றுக்கணக்கான, ஒருவேளை ஒருசில ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் இருந்திருக்கலாம். பவுலின் ஊழியத்தின் மூலம், கலாத்தியாவில் ஒரு சில சபைக் குழுமங்கள் உண்டாகியிருந்தன என்று நாம் அறிகிறோம். இந்தத் தொடக்க காலத்தில், பொந்து பித்தினியா அல்லது கப்பத்தோக்கியா பகுதிகளில் ஊழியம் ஏதேனும் செய்யப்பட்டிருந்தது பற்றி நாம் ஒன்றும் அறிவதில்லை. இந்த மாகாணங்களின் பரந்து விரிந்த பகுதிகளில் பேதுருதாமே ஊழியம் செய்து பிரசங்கித்து இருக்கச் சாத்தியக்கூறு உள்ளது. அந்தப்பகுதி முழுவதிலும் அப்போஸ்தலரின் வார்த்தைகளைக் கேட்கக் கூடிய கிறிஸ்தவர்கள் இருப்பார்கள் என்று அவர் எதிர்பார்த்தார்.

**வசனம் 2.** பேதுரு தமது தொடக்கக் குறிப்பை விளக்கியுரைக்கத் தொடர்ந்தார். அவர்களுக்கு தாங்கள் யாராக இருந்தனர், கிறிஸ்துவை தழுவியிருத்தல் என்பது எதை அர்த்தப்படுத்திற்று என்பவை பற்றிய முழுமையான புரிந்து கொள்ளுதல் தேவைப்பட்டது. அவர்கள், **பிதாவாகிய**

***தேவனுடைய முன்னறிவின் படியே*** *தேர்ந்து கொள்ளப்பட்டிருந்த மக்களாயிருந்தனர். கிறிஸ்தவர்கள், புற தெய்வ வணக்கம் அல்லது யூதமார்க்கம் என்ற எந்தப் பின்னணியில் இருந்து வந்திருந்தாலும், இஸ்ரவேலுக்குத் தம்மை வெளிப்படுத்திய அதே தேவன்தாம் நசரேயனாகிய இயேசுமூலமாகத் தம்மை வெளிப்படுத்தினார் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டியிருந்தது மிகவும் முக்கியம் என்று பேதுரு நம்பினார். இயேசுவைப் பற்றிப் பிரசங்கித்தல் என்பது புதிய கடவுளை அறிவித்தலாக இருக்கவில்லை. மற்றும், சபையை நிலைநாட்டுதல் என்பது உலகத்திற்குத் தேவன் திடீரெனக் கொண்டு வந்த திட்டமல்ல. அவரால் "தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள்" இயேசு கிறிஸ்துவின் மீது விசுவாசத்தை அறிக்கையிடச் சூழ்ந்த போது, கடந்து போன காலங்களில் முன்னறியப்பட்டிருந்த தேவனுடைய நோக்கங்கள், உணர்ந்து அறியப்பட்டன.*

*புதிய ஏற்பாட்டை எழுதிய ஏவுதல் பெற்ற எழுத்தாளர்கள் "தேவனுடைய முன்னறிவு" பற்றி எழுதியபோது, குமாரனுக்குள் வெளிப்படுத்தப்பட்ட இரட்சிப்பு பற்றிய அவரது (தேவனுடைய) "முன்னறிதல்" என்பதே நிலையான பாடப் பொருளாயிருந்தது. இது அவரது சபையான புதிய இஸ்ரவேலைப் பற்றிய முன்னறிவாக உள்ளது. எதிர்மறையாக உரைப்பதென்றால், தனி நபர்களின் நித்திய அடைவிடம் பற்றி தேவனுடைய முன்னறிதல் குறித்துப் புதிய ஏற்பாடு அக்கறையற்று உள்ளது எனலாம். சிலருக்கு ஆக்கினைத்தீர்ப்பையும் மற்றவர்களுக்கு இரட்சிப்பையும் தேவன் முன்குறித்து வைத்திருப்பதில்லை. தனிநபர்கள் அல்ல, ஆனால் சபை என்பதே தேவனுடைய "முன்னறிவின்" கருப்பொருளாக உள்ளது. சபை என்பது தேவனுடைய பிந்திய சிந்தனையல்ல என்பதைத் தமது வாசகர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று பேதுரு விரும்பினார். அது தேவனுடைய சிந்தையில் என்றென்றும் இருந்தது. இயேசு கிறிஸ்துவின் சபையொன்று இருக்க வேண்டும், அதில் இஸ்ரவேல் மாத்திரமல்ல ஆனால் மனிதகுலம் முழுவதும் இருக்க வேண்டும் என்று தேவன் முன்னறிந்து முன்குறித்திருந்தார். அதுபோல, தேவன் "நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய்த் தமக்கு சுவிகார புத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார்" என்று பவுல் எழுதியபோது (எபேசியர் 1:6), "நம்மை" என்பது தனிநபர்கள் என்றவகையில் அல்ல. ஆனால் "நம்மை" என்பது தேவன் முன்குறித்திருந்த ஒரு மக்கள் கூட்டமாகவே இருந்தது.*

***ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே*** *(en hagiasmōi pneumatos), என்ற சொற்றொடர், "ஆவியானவரின் பரிசுத்தத்திற்குள்" என்று நேரடியாக அர்த்தப்படுகிறது, இது தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் ஆவியானவரின் முகமையினால் பரிசுத்தமாக்கப்பட்டுள்ளதை அறிவிக்கிறது.*[2] *இதே சொற்றொடர் 2 தெசலோனிக்கேயர் 2:13லும் உள்ளது. அங்கு* NASB *வேதாகமத்தில்* "through sanctification by the Spirit." *என்றுள்ளது. ஆவியானவரால் பரிசுத்தமாக்கப்படுதலை, சுவிசேஷத்தின் சத்தியம் மீதான விசுவாசத்துடன் பவுல் இணைத்தார். பேதுரு இதை இயேசு கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிதலுடன் இணைத்தார். இவ்விரண்டு அப்போஸ்தலர்களுமே, ஒரே உண்மை நிலையை மாறுபட்ட வார்த்தைகளில் விளக்கப்படுத்தினர். சுவிசேஷத்தின் அழைப்பை கேட்டு விசுவாசி கீழ்ப்படியும்போது அவரை ஆவியானவர் பரிசுத்தமாக்குகிறார். கீழ்ப்படிதல் உள்ள விசுவா-*

*சியின் வாழ்வில் ஆவியானவர் வந்து தங்குகிறார் (நடபடிகள் 2:38) மற்றும் தேவபக்தியுள்ள வாழ்வில் அவரை ஆதரிக்கிறார். விசுவாசியின் வாழ்வு தேவனுடைய சுயபரிசுத்தத்தின் பிரதிபலிப்பாய் இருப்பதில் அவர் "பரிசுத்தவான்" என்று குறிப்பிடப்படுகிறார் (1 பேதுரு 1:15, 16). அவர் தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவராக இருப்பதற்கு ஆவியானவரால் பிரித்துவைக்கப்பட்டுள்ளதால் பரிசுத்தமாயிருக்கிறார்.*

*பரிசுத்த ஆவியானவரால் விசுவாசிக்கு அளிக்கப்பட்ட பரிசுத்தமாக்கப்படுதலானது,* **கீழ்ப்படிதலுக்கும் இயேசுகிறிஸ்துவின் இரத்தம் தெளிக்கப்படுதலுக்கும்** *என்ற விளைவை ஏற்படுத்திற்று.* NASB *வேதாகமத்தின் மொழிபெயர்ப்பு, "இயேசுகிறிஸ்துவின்" (Iēsou Christou) என்ற சொற்றொடரை, கீழ்ப்படிதல் மற்றும் தெளிக்கப்படுதல் என்ற இரண்டு விஷயங்களுடனும் இணைத்துப் பொருள் கொள்வதாக உள்ளது. கிரேக்க மொழியில் (தமிழ் வேதாகமத்தில் உள்ளது போன்று) "இயேசு கிறிஸ்துவின்" என்ற சொற்றொடர் "தெளித்தல்" என்ற விஷயத்துடன் மாத்திரம் இணைவுபடுத்தப்பட்டுள்ளது. கீழ்ப்படிதல் என்பதைத் தனித்து நிற்கும் கருத்தாக எடுத்துக் கொள்ளுதல் மிகச்சிறப்பாக இருக்கும். ஆவியானவரின் பரிசுத்தமாக்கும் பணியானது, "கீழ்ப்படிதலுக்கும், இயேசு கிறிஸ்துவின் இரத்தம் தெளிக்கப்படுதலுக்கும்" ஆனதாக உள்ளது. பரிசுத்தமாக்குதல் என்பது கிறிஸ்தவர் மீது செய்யப்படுகிற மந்தமான செயலாக இருப்பதில்லை என்று பேதுரு தமது வாசகர்களுக்கு நினைவூட்டினார். விசுவாசியானவர், தேவனுடைய சித்தமே தமது சொந்த சித்தமாகும்படிக்கு, தேவனுடைய சித்தத்தை அரவணைத்துக் கொள்கிறார். ஒருபுறம், பழைய கிறிஸ்தவக் கீர்த்தனையொன்றின் வார்த்தைகளான "யாதுமற்ற ஏழைநான் ... உம் சிலுவை தஞ்சமே"[3] என்பவை உறுதிப்படுத்துவது போல், கிறிஸ்து பரிசுத்தமாக்குகிறார் (1 கொரிந்தியர் 1:30). மறுபுறம், பரிசுத்தமாகுதல் என்பது விசுவாசியின் மீது சுமத்தப்படும் ஒழுக்கரீதியான கட்டளையாக உள்ளது. இது கீழ்ப்படிதல் ஆகும். கிறிஸ்தவராயிருத்தல் என்பது இறுக்கத்திற்குள் வாழுதலாக உள்ளது: (1) கிறிஸ்துவே பரிசுத்தமாக்குகிறார். (2) "கிறிஸ்துவின் செய்தியை ஏற்றுக் கொண்டு அதன்படி வாழுதல் என்ற மனித முடிவு" என்பதிலிருந்து பரிசுத்தமாகுதல் வருகிறது.*[4]

*"அவருடைய இரத்தம் தெளிக்கப்படுதல்." இதே முன்மொழிதலால் ஆளுகை செய்யப்பட்ட, விசுவாசி பரிசுத்தமாக்கப்படுதல் என்பது கீழ்ப்படிதலுக்கானதாகவும் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் தெளிக்கப்படுதலுக்கானதாகவும் உள்ளது. பேதுரு கண்டிப்பான கிறிஸ்தவக் கருத்துக்களை இஸ்ரவேல் மக்களின் மார்க்க வாழ்வில் ஆழமாக வேரூன்றியிருந்த உருவகத்துடன் ஒன்றுகலக்கத் தொடர்ந்தார். இரத்தம் சிந்துதல் என்பது இஸ்ரவேல் மக்களுக்கு, பரிசுத்தமாக்கப்படுதல் அற்பமான காரியமல்ல என்பதை நினைவூட்டுவதாக இருந்தது. மக்கள் மீதும் தகன பலிபீடத்தின் மீதும் மோசே ரத்தத்தைத் தெளித்தார் (யாத்திராகமம் 24:6, 8), மற்றும் ஆசாரியர்கள் பீடத்தின் மீது இரத்தத்தைத் தெளிக்க வேண்டியிருந்தது (லேவியராகமம் 3:2). எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "நியாயப்பிரமாணத்தின்படி, கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்; இரத்தஞ் சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது" என்று எழுதினார் (எபிரெயர் 9:22).*

ஒருவர் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்படுதல் என்பது முற்றிலும் ஆவிக்குரிய கருத்தாக உள்ளது. உண்மையில் இரத்தம் என்பது கறைப்படுத்துவதாக உள்ளது; அது சுத்திகரிப்பதில்லை. இதற்கு மறுபுறத்தில், தண்ணீர் சுத்தி கரிக்கும் பொருளாக உள்ளது. இவ்வாறாக, சுத்திகரிக்கும் தண்ணீர் பற்றியும் மோசேயின் நியாயப்பிரமாணம் அறிந்துள்ளது. எண்ணாகமம் 19 ல் சிகப்புநிறக் கிடாரியைக் கொண்டு செய்யப்படவேண்டிய சடங்காச்சாரத்தை நியாயப்பிரமாணம் முன்வைக்கிறது. சடங்காச்சாரரீதியாக தீட்டானவர்களைச் சுத்திகரிப்பதற்கு, சிகப்புக் கிடாரியை எரித்த சாம்பலுடன் தண்ணீர் கலந்த கலவையை ஆசாரியர்கள் தயாரிக்க வேண்டியிருந்தது. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், இரத்தந்தெளிக்கப்படுதலையும் தண்ணீரால் கழுவப்படுதலையும் ஒன்றாக இணைத்த பின்வரும் வசனம் அதிகம் ஆர்வத்தி ற்குரியது: “துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும் சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையான இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்” (எபிரெயர் 10:22). பேதுருவும் கூட, தமது வாசகர்களின் மறுபிறப்பு பற்றி, அவர்கள் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற போது உணர்தறிந்த ம றுபிறப்பு பற்றி கூற விரைவில் கடந்து வரவிருந்தார்.

இந்த ஒருசில வார்த்தைகளுடன் அப்போஸ்தலர், பிதாவாகிய தேவன், குமாரனாகிய இயேசுகிறிஸ்து மற்றும் பரிசுத்தமாக்குதலின் தேவனுடைய முகவரான பரிசுத்த ஆவியானவர் ஆகியோருடைய ஆசீர்வாதங்களை வேண்டி அழைத்தார். தேவன் ஒருவரேயென்று கிறிஸ்தவர்கள் உறுதிப்படுத்துகின்றனர், ஆனால் அவரது ஒருமைத்தன்மை மூன்று நபர்களில் காட்சியாகிறது: பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர். தேவனுடைய ஒருமைத்துவம் என்பது யூதர்களுக்கு, விசுவாசத்தின் கடையாணியாக இருந்தது. இது இன்னும் இவ்வாறே இருக்கிறது. தேவன் ஒருவராயிருந்தும் அவர் மூன்று நபர்களாயிருப்பது எப்படி என்று விளக்குவதற்கு, கோட்பாட்டளவிலான கலந்துரையாடல் எதையும் புதிய ஏற்பாடு தருவதில்லை. புதிய ஏற்பாட்டின் மற்ற எழுத்தாளர்களைப் போன்றே, பேதுருவைப் பொருத்த மட்டிலும் கூட, திரித்துவம் எளிதில் புரிந்து கொள்ளக் கூடிய கொள்கையாக இருந்தது. சபையானது தனது மிகத் தொடக்க வரலாற்றில் இருந்தே கொள்கை குறித்துப் போராடியுள்ளது. திரித்துவம் பற்றிய விளக்கங்கள் ஏராளமாயிருந்தாலும் அவைகள் திருப்திப் படுத்துதலில் குறைவுபடுபவையாகவே உள்ளன.

திரித்துவம் ஒப்பீட்டளவில் சிறிதளவே கவனத்தைப் பெற்றுள்ளது ஏன்? வேதாகமம் இவ்வார்த்தையைப் பயன்படுத்துவதில்லை என்பது ஒரு காரணமாக உள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் Barton W. Stone அவர்கள் செல்வாக்கு மிகுந்த சுவிசேஷப் பிரசங்கியாராக இருந்தார். புதிய ஏற்பாட்டு சபையை மீளக் கட்டுவதற்கான அமெரிக்கநாட்டு இயக்கத்தி ன் மீது ஸ்டோன் அவர்களின் ஊழியத்தின் நிழல் பெரிய அளவில் விழுந்தி ருந்தது. அவரது பெயரை ஒருக்காலும் கேள்விப்பட்டிராதவர்களும் மிக அரிதாகவே அவரைப் பற்றி உணர்ந்தறியக் கூடியவர்களாவும் இருந்த பலர்மீது அவர் செல்வாக்குச் செலுத்தினார். திரித்துவம் என்ற கருத்தைக் குறித்து எதையும் செய்யாதிருக்கவே ஸ்டோன் விரும்பினார். அது இசைவிணக்கம் அற்றதாயிருந்தது என்ற கருத்தை அவர் பராமரித்தார். திரித்துவம் என்பது

அத்தியாவசியமான கிறிஸ்தவ உபதேசமாக இருந்தது என்பதைத்தவிர, வேறு எந்த விஷயத்திலும் கிறிஸ்தவ சிந்தனையாளர்கள் இருவர் கருத்து ஒருமித்து இருப்பதில்லை என்பதாகக் காணப்படுகிறது. எவரொருவராலும் விளக்கியுரைக்கப்பட இயலாத ஒன்று அத்தியாவசியமான கிறிஸ்தவ உபதேசமாக இருக்கக் கூடுவது எவ்வாறு? என்று ஸ்டோன் கேட்டார்.[5] விசுவாசிகள் மத்தியில் ஒருமைப்பாடு நிலவ வேண்டும் என்பதற்காக, திரித்துவம் பற்றிய நிலைப்பாடு எதையும் மேற்கோள்ளாதிருக்க ஸ்டோன் விரும்பினார். இதேநிலையை இன்றைய நாட்களில் சபையில் பலர் பின்பற்றுகின்றனர். இருப்பினும் பேதுரு தெளிவாக்கியபடி, "திரித்துவம்" என்ற வார்த்தை வேதாகமத்தில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், அந்தக் கருத்து அங்கு (வேதாகமத்தில்) உள்ளது. தேவன் ஒருவராகவும் அதே வேளையில் மூவராகவும் இருக்கிறார் என்பது எவ்வாறு என்று புரிந்து கொண்டிருப்பதாக எந்தக் கிறிஸ்தவரும் கூற இயலாவிட்டாலும், தேவன் பிதாவாகவும், குமாரனாகவும் மற்றும் பரிசுத்த ஆவியானவராகவும் இருக்கிறார் என்று பேதுருவுடன் சேர்ந்து நாம் உறுதிப்படுத்தலாம்.

**தெரிந்து கொள்ளப்பட்ட பரதேசிகளுக்கு** என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *parepidēmos,* என்ற வார்த்தையின் பயன்பாடு, பழைய ஏற்பாட்டில் ஆழமாக வேரூன்றியுள்ள ஒரு ஆய்வுக் கருத்தை எடுத்தாளுகிறது. பேதுரு, 1:17ல் தமது வாசகர்கள் "இங்கே (இந்த பூமியில்) ... சஞ்சரித்தல்" (*paroikia*) என்று எழுதுவார். 2:11ல் அவர் "அந்நியர்களும், பரதேசிகளும்" என்று அவர் குறிப்பிட்டார், இங்கு *paroikos* மற்றும் *parepidēmos* என்ற இரண்டு வார்த்தைகளையும் பயன்படுத்தினார். கானான் நாட்டில் நிலையற்றுச் சுற்றித்திரிபவராக ஆபிரகாம் வாழ்ந்த காலம் நோக்கி இக்கருத்து பின்செல்கிறது. சாராள் இறந்தபோது அவரை அடக்கம் செய்ய ஆபிரகாமிடம் நிலம் இல்லை. அங்கிருந்த மக்களிடம் அவர், "நான் உங்களிடத்தில் அந்நியனும் பரதேசியுமாயிருக்கிறேன்" என்று கூறினார் (ஆதியாகமம் 23:4; காண்க எபிரெயர் 11:13). இந்த ஆய்வுக்கருத்து, தேவனிடத்தில் "பரதேசிகளும் புறக்குடிகளுமாக" இருக்கும்படி அழைக்கப்பட்ட இஸ்ரவேல் மக்களிடத்திலும் தொடர்ந்தது (லேவியராகமம் 25:23; காண்க சங்கீதம் 39:12). இயேசு கிறிஸ்துவுக்கு உரியவர்கள் இந்த உலகத்தை இல்லிடமாய்க் கொண்டிருப்பதில்லை என்பதைப் பேதுருவின் வார்த்தைகள் நினைவூட்டுகின்றன. இங்கு அவர்கள் இவ்வுலகத்தைக் கடந்து செல்லும் திருப்பயணிகளாக உள்ளனர். கிறிஸ்தவர்கள் இவ்வுலகத்துடன் மிகவும் பிணைப்பட்டவர்கள் ஆகி விடக்கூடாது என்பது அவர்களுக்கு ஒரு எச்சரிக்கையாக உள்ளது. கர்த்தர் தமது மகிமையுடன் திரும்பி வரும்போது, அவர்களின் நிரந்தரமான இல்லிடம் வெளிப்படுத்தப்படும்.

1 பேதுரு மற்றும் யாக்கோபு ஆகிய இரண்டு நிருபங்களுமே தங்களின் வாசகர்களை **சிதறியிருக்கிற** அல்லது "கலைந்திருக்கிற" (*diaspora*) மக்கள் என்று குறிப்பிடுகின்றன. புதிய ஏற்பாட்டில் இவ்வார்த்தை காணப்படும் மற்றொரு இடம் யோவான் சுவிசேஷம் (யோவான் 7:35) மட்டுமே ஆகும், அங்கு அது, பலஸ்தீனத்தை விட்டுப் புறம்பே சென்று வாழ்ந்திருந்து, கிரேக்க மொழியைப் பேசிய யூதர்களைக் குறிக்கிறது. பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பான செப்துவஜிந்த் (LXX), வேதாகமத்தில் (இது கிரேக்க மொழி பேசிய யூதர்கள் மத்தியில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது),

*"diaspora"* என்ற வார்த்தை, புறஜாதியாருக்கிடையில் சிதறியிருந்த இஸ்ரவேல் மக்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது (உபாகமம் 28:25; எரேமியா 41[34]:17). "சிதறியிருக்கிறவர்கள்" என்பது, பேதுரு மற்றும் யாக்கோபு ஆகிய இருவருக்குமே, கிரேக்க - ரோமானிய உலகத்தில் சிதறப்பட்டு இருந்த கிறிஸ்தவர்களாவர், ஆனால் இது அதைக்காட்டிலும் அதிக அர்த்தம் கொண்டிருந்தது. பேதுருவின் வாசகர்கள் தங்கள் பரலோக இளைப்பாறுதலில் இருந்து பிரிந்திருக்க நேர்ந்தது பற்றிப் பேதுரு புரிந்து கொண்டிருந்தார். மீட்பின் நாளுக்காக அவர்கள் காத்திருந்தனர். Paul S. Minear அவர்கள், "சபையானது 'சிதறியிருக்கிற பரதேசிகள்' என்று குறிப்பிடப்பட்டபோது (யாக்கோபு 1:1; 1 பேதுரு 1:1) இவற்றை எழுதியவர்கள், பாலஸ்தீனத்தில் அல்ல ஆனால் பரலோக நகரில் கிறிஸ்தவர்கள் சென்று சேராமல் இன்னும் இந்த பூமியில் வாழ்ந்திருந்தனர் என்பதையே தங்கள் சிந்தையில் கொண்டிருந்தனர்" என்று சரியாக உற்றுநோக்கினார்.[6] கிறிஸ்துவை அறிதல் என்பது, கர்த்தருக்குப் பிரியமானதில் இருந்து தொடர்பு தூண்டிக்கப்பட்டு இருத்தலை உணர்ந்தறிந்து, தற்காலத்தில் மக்களைப் பிரியப்படுத்துதல் ம ற்றும் இயக்குதல் ஆகிய விஷயங்களில் இருந்து தங்களைத் துண்டித்துக் கொள்ளுதலை குறிக்கிறது.

பேதுரு, தமது வாசகர்களில் புறஜாதியாரும் கலந்திருப்பார்கள் என்று எதிர்பார்த்தார் என்பதே பேதுருவின் நிருபம் யாக்கோபுவின் நிருபத்தில் இருந்து மாறுபட்டுள்ள விஷயமாகும் (1:14, 18 ஆகியவற்றின் மீதான விளக்கங்களைக் காணவும்). இப்பாடக் கருத்தின் மீது கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன என்றாலும், யாக்கோபு தமது வாசகர்களில் எவரும் புறஜாதி யாராக இருப்பார் என்று எதிர்பார்த்ததாகத் தோன்றுவதில்லை. குறிப்பிட்ட புவியியல் பகுதியில் சிதறியிருந்தவர்களை குறிப்பிட்டார் என்ற வகையிலும் பேதுரு யாக்கோபுவில் இருந்து வேறுபடுகிறார். பேதுருவைப் பொறுத்தம ட்டில், அவர் குறிப்பிட்ட ரோமமாகாணங்களில் இருந்த யூத மற்றும் புறஜாதி விசுவாசிகளே "சிதறியிருந்தவர்கள்" ஆவர். இந்தச் சொற்றொடர் கிறிஸ்தவர்களுக்கு ஒரு உருவக அணியாக உள்ளது. யாக்கோபுவைப் பொறுத்தமட்டில், குறிப்பாக யூதக் கிறிஸ்தவர்களே "சிதறியிருந்தவர்கள்" ஆவர். இச்சொற்றொடரை யூதர்கள் பயன்படுத்திய நுட்பமான வழியில் யாக்கோபுவும் பயன்படுத்தினார். அவர் கானான் தேசத்தில் வாழ்ந்திராத யூதர்களைக் குறிப்பிட்டார்.

பேதுரு தமது வாசகர்களை இருவார்த்தைகளைக் கொண்டு விவரித்தார், அவை ஒவ்வொன்றுமே, ஆவிக்குரிய மறைவான கருத்துக்கள் நிரம்பி வழிபவையாக உள்ளன. அவர்களை அவர், "தெரிந்துகொள்ளப்பட்ட" வர்கள் என்று அழைத்தார், மற்றும் அவர்களை அவர் "பரதேசிகள்" என்றும் அழைத்தார். இவ்விரு வார்த்தைகளிலும் இருந்து பாய்ந்தோடி வரும் செல்வவளம், பழைய ஏற்பாட்டில் இவற்றில் பயன்பாட்டில் இருந்து வருகிறது. பழைய ஏற்பாட்டில் இருந்து அவர் காண்பிக்கும் மேற்கோள் ம ட்டுமே, கிறிஸ்தவத்தை அது இஸ்ரவேலில் கொண்டுள்ள வேர்களுடன் பிணைக்கும் கயிறுகளாக இருப்பதில்லை. உலகமே பழைய ஏற்பாட்டில் நிலைகொண்டிருந்தது என்று பேதுரு நினைத்தார். கடந்தகாலத்தில் இருந்த தீர்க்கதரிசிகள், நியாயப்பிரமாணிகர்கள், மற்றும் ஞானமுள்ள மனிதர்கள்

ஆகியோரின் வெளிப்படுத்துதலில் இருந்து, குறிப்பிட்டதக்க வார்த்தைகள், கருத்துக்கள், மற்றும் புத்திமதிகள் ஆகியவற்றை இந்த அப்போஸ்தலர் தரவழைத்தார். இந்தச் செயல்முறையில் அவர், பழைய ஏற்பாட்டு வார்த்தைகளையும் ஆய்வுக் கருத்துக்களையும் விரித்துரைத்து, அவற்றிற்கு தனிச்சிறந்த கிறிஸ்தவ வண்ணத்தைக் கொடுத்தார்.

"பரதேசிகள்" மற்றும் இவ்வார்த்தையுடன் நெருங்கிய இணைவு பெற்ற அர்த்தச் சொற்களாக 1:17 மற்றும் 2:11ல் காணப்படும் சொற்கள் ஆகியவற்றின் கலந்துரையாடலை நாம் தேக்கி வைத்துக் கொள்வோம். இவ்வேளையில் நாம், **தெரிந்து கொள்ளப்பட்ட** என்ற வார்த்தையை ஆய்வு செய்ய விரும்புகிறோம். யூதர்கள் தங்களைத் தாங்களே அடையாளப்படுத்திக்கொள்வதற்கு, "தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்" என்பதைக் காட்டிலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்த சொற்றொடர் வேறு எதுவும் இல்லை. அவர்கள், தேவன் தேர்ந்து கொண்டிருந்த மக்களாயிருந்தனர். வனாந்தரத்தில் இஸ்ரவேல் மக்களிடத்தில் மோசே, "அவர் உன் பிதாக்களில் அன்புகூர்ந்தபடியால், அவர்களுடைய பின்சந்ததியைத் தெரிந்து கொண்டார்" என்று கூறினார் (உபாகமம் 4:37). நியாயப்பிரமாணிகர், "... கர்த்தர் உன் பிதாக்கள் மேல் அன்புகூரும் பொருட்டு ... அவர்களுக்குபின் அவர்களுடைய சந்ததியாகிய உங்களை ... சகல ஜாதிகளுக்குள்ளும் தெரிந்து கொண்டார்" என்றும் கூடுதலாகக் கூறினார் (உபாகமம் 10:15).

"தெரிந்துகொள்ளப்பட்ட" என்பது யூதர்களுக்கே குறிப்பாகப் பயன்படுத்தப்பட்டதால், (சங்கீதம் 105:6), அவர்கள் தாவீது மற்றும் அவர் சந்ததியின்கீழ் மற்றும் மிக சமீபத்தில் மக்காபேயர்கள் மற்றும் அவர்களின் சந்ததியின்கீழ் அரசியல் அமைவு பெற்ற மக்களினமாக இருந்தபடியால், மற்றும் கிறிஸ்துவின் செய்தியானது எல்லா மக்களிடங்களுக்கும் உரியதாக இருப்பதால் (மத்தேயு 28:19), "தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்" என்ற வார்த்தையை, கிறிஸ்தவர்கள் (பழுவைக் குறைக்க) தூக்கியெறிவார்கள் என்று ஒருவர் எதிர்பார்க்கலாம். அவர்கள் அதைச் செய்யவில்லை என்பது தெளிவு. இயேசுகிறிஸ்துவின் சபையானது இஸ்ரவேலின் நேரடியான ஆவிக்குரிய விரிவாக்கமாக உள்ளது. *Eklektos* என்ற கிரேக்க வார்த்தை, "தேர்ந்துகொள்ளப்பட்ட" அல்லது "தெரிந்துகொள்ளப்பட்ட" என்று பல்வேறு வகையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பவுலோ (ரோமர் 8:33; கொலோசெயர் 3:12; தீத்து 1:1) அல்லது பேதுருவோ, கிறிஸ்தவர்கள் தேவனால் "தெரிந்துகொள்ளப்பட்டவர்களாக" இருந்தனர் என்பதை மறந்துபோகும்படி அனுமதிக்கவில்லை.

தெரிந்துகொள்ளப்படுதல் என்ற செயல்முறையில் கிறிஸ்தவர்கள் செயல் எதுவும் செய்யாதிருப்பதாக நினைக்கும்படி அவர்கள் சோதிக்கப்படுகின்றனர். அவர் எதுவும் செய்வதில்லை; அவர் வெறுமனே அமைதியாக அமர்ந்து கொண்டு தம்மைத் தேவன் தேர்ந்துகொள்ள அனுமதிக்கிறார். தெரிந்துகொள்ளப்படுதல் என்பதை சிலர் இருதயத்தில் ஏற்படும் ஆவிக்குரிய விழிப்புணர்வுடன் - அவர் மீட்கப்பட்டிருப்பதையும் அதனால் அவர் தேவனுக்கு உரியவராயிருக்கிறார் என்பதையும் உள்ளாக உணரும் அனுபவத்துடன் - இணைவுபடுத்துகின்றனர். இக்கருத்துடன் இணைவு பெற்ற உபதேசம் ஒன்று, தேவன் நித்தியகாலமாக குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மக்களைத் தேர்ந்துகொண்டுள்ளார் என்ற கருத்தைக் கொண்டுள்ளது. ஒருவர், தேர்ந்துகொள்ளப்பட்டவராகவோ

அல்லது தேர்ந்துகொள்ளப்படாதவராகவோ இவ்வுலகத்தில் பிறக்கிறார் என்று கூறப்படுகிறது. தேவனுடைய ராஜரீக, நித்திய உத்தரவின்படி/நியமத்தின்படி ஒருவர் தேர்ந்துகொள்ளப்பட்டோ அல்லது தேர்ந்துகொள்ளப்படாமலோ இருப்பதால், அவர் (மனிதர்) தமது நிலைப்பாட்டை மாற்ற எதுவும் செய்ய இயலாது (எனப்படுகிறது).

இப்படிப்பட்ட கருத்துக்கள், மக்கள் பற்றிய கருத்தைப் புறக்கணிக்கும் படி, தனிநபர் மீது அதிக கவனம் குவிக்கின்றன. இவ்விஷயத்தில் தேவனுடைய முன்னறிதல் என்பது, "சபையை இருக்கும்படி கொண்டுவருவதில் அவரே தொடக்கச் செயலை மேற்கொண்டார் என்று கூறும் வழியாக உள்ளது" என்றுரைத்த I. Howard Marshall அவர்களின் கூற்று சரியாகவே உள்ளது.[7] தேர்ந்து கொள்ளப்பட்ட மக்கள் என்ற கருத்து பழைய ஏற்பாட்டில் இருந்து உதிக்கிறது. இஸ்ரவேல் என்பது தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களினமாக இருந்தது, ஆனால் இஸ்ரவேல் மக்களினத்தில் தனிநபர்கள் சிலர் மிகவும் தேவ பக்தியற்றவர்களாக இருந்தனர். தனிநபர்கள் தேவபக்தியற்று இருத்தல் என்பது, தேர்ந்துகொள்ளப்பட்ட மக்கள் என்ற வகையில் அவர்களின் நிலைப்பாட்டை மாற்றவில்லை. தனிநபர் தேவபக்தியற்றுப் போகும்போது, அவர் என்றென்றைக்கும் தேவனுடைய சமூகத்திலிருந்து துண்டிக்கப்படுவார், ஆனால் இஸ்ரவேல் மக்களினம் தேர்ந்துகொள்ளப் பட்டதாகவே நிலைத்திருந்தது.

அவ்வாறே, இஸ்ரவேலின் தேர்ந்துகொள்ளப்பட்ட நிலைப்பாட்டின் ஆவிக்குரிய சந்ததியான சபையும், "தேர்ந்துகொள்ளப்பட்ட" என்ற குறிப்புப் பெயரை மகிழ்வுடன் அனுபவிக்கிறது. தனிநபர் ஒருவரின் விசுவாசமானது செயல்படும்படி அவரை வற்புறுத்தும்போது, அவர் சபையில் அங்கம் வகிக்கிறார் மற்றும் தேர்ந்துகொள்ளப்பட்டவர்களுடன் இருக்கிறார். தேவனுடைய அழைப்பில் "எதிர்த்து நிற்க இயலாத" கிருபை என்று எதுவும் இருப்பதில்லை. தேர்ந்துகொள்ளப்பட்டவர்களாக இருத்தல் என்பது, இரட்சிப்பின் உலகளாவிய அளிப்பிற்குத் தனிநபர் தரும் நேர்மறையான பதில்செயலின் பாகமாக உள்ளது. பவுல், "... நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறதினாலும். சத்தி யத்தை விசுவாசிக்கிறதினாலும் இரட்சிப்படையும்படிக்கு, ஆதி முதல் தேவன் உங்களைத் தேர்ந்துகொண்டபடியினாலே, ... எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்" என்று எழுதினார் (2 தெசலோனிக்கேயர் 2:13, 14). ஒருவர், சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டு, அது அறிவிப்பதை விசுவாசித்து, அதற்குக் கீழ்ப்படிகிற போது, "தேர்ந்துகொள்ளப்பட்டவர்களுடன்" இருக்கும்படி தமது செயல்பாட்டை மேற்கொள்கிறார். எவர்களுடைய விசுவாசம் கீழ்ப்படியும்படி வற்புறுத்துகிறதோ, அவர்களை தேவன் தமது கிருபையினால் தேர்ந்துகொள்கிறார் - (எபேசியர் 2:8). தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள் கிறிஸ்துவுக்கு சொந்தமான சபையில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள் (நடபடிகள் 2:47).

பேதுரு தமது முன்னுரைக் கூற்றுகளை முடித்த நிலையில், தமது முறைப்படியான வாழ்த்தை உரைத்தார். **கிருபையும் சமாதானமும் உங்களுக்குப் பெருகக்கடவது,** கிரேக்க மொழியில் இதே வார்த்தைகளைக் கொண்டு இந்த அப்போஸ்தலர் தமது இரண்டாவது நிருபத்தைத்

*தொடங்கினார் (2 பேதுரு 1:2). பவுல் தமது நிருபங்களில் "கிருபையும் சமாதானமும்" என்ற வார்த்தைகளை வழக்கமாகப் பயன்படுத்தினார். அவைகள் தமது வாசகர்களுக்குப் பெருக வேண்டும் என்ற விருப்பத்தைப் பேதுரு கூடுதலாகக் கூறினார். ஒரு கருத்தில் இவ்வார்த்தைகள் சம்பிரதாயமானவையாக இருந்தன. இவற்றை உரைத்தபோது பேதுரு இவற்றின் அர்த்தம் பற்றி மிகவும் சிந்தித்திருக்க வாய்ப்பு இல்லை. இன்னொரு கருத்தில், இவ்வார்த்தைகள் சம்பிரதாயமானவை என்பதைக் காட்டிலும் அதிகம் பொருள் நிறைந்தவையாக இருந்தன. தேவனுடைய கிருபையுள்ளதும் இலவசமானதுமான கொடைகள், அத்துடன் தேவசமாதானம் ஆகியவை இந்தத் கிறிஸ்தவர்களின் வாழ்வில் நிரம்பவேண்டும் என்ற தமது இருதயப்பூர்வமான வாழ்த்துக்களைப் பேதுரு இவர்களுக்கு அறிவிக்க விரும்பினார்.*

## *நடைமுறைப் பயன்பாடு*

### *தெரிந்துகொள்ளப்பட்ட பரதேசிகள் (1:1, 2)*

*இஸ்ரவேல் மக்களுக்கு மோசே நியாயப்பிரமாணத்தைக் கொடுத்த போது, சில வேளைகளில் அவர் ஒரு தடையைத் தொடர்ந்து "இதைச் செய்கிறவன் தன் ஜனத்தில் இராதபடி அறுப்புண்டு போவான்" என்ற வார்த்தைகளைக் கூறினார். உதாரணமாக, விக்கிரக ஆராதனைக்குத் தண்டனையைத் தேவன் இவ்வாறு அமைத்தார்:*

> *நான் அந்த மனிதனுக்கும் அவன் குடும்பத்துக்கும் விரோதமாக எதிர்த்து நின்று, அவனையும், அவன் பிறகே மோளேகை விபசார மார்க்கமாய்ப் பின்பற்றின யாவரையும், தங்கள் ஜனத்தில் இராதபடி அறுப்புண்டு போகப் பண்ணுவேன். அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறிசொல்லுகிறவர்களையும் பின்தொடர்ந்து சோரம்போக எந்த ஆத்துமா அவர்களை நாடுகிறானோ, அந்த ஆத்துமாவுக்கு விரோதமாக எதிர்த்து நின்று, அவனைத் தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போகப் பண்ணுவேன் (லேவியராகமம் 20: 5, 6).*

*ஒருவர் தம் ஜனத்தில் இருந்து அறுப்புண்டு போகுதல் என்பதைக் காட்டிலும் வேறு அதிகம் கடுமையான தண்டனை எதுவும், பழங்காலத் தூர கிழக்கு நாடுகளின் நெருக்கமாகப் பிணைக்கப்பட்ட சமூக அமைவில் இருந்ததில்லை. ஒருநபர் நாடுகடத்தப்படும்படி வற்புறுத்தப்படுதல் என்பது கடுமையான தண்டனையாக இருந்தது. யூதேயா நாடு பாபிலோனால் வெற்றி கொள்ளப்பட்ட போது, அதன் மக்களினம் முழுவதும் தனது சொந்த இடத்தில் இருந்து அந்நியநாட்டுக்கு இழுத்துச் செல்லப்பட்டவர்களாக இருந்தனர். நாடுகடத்தப்பட்டு பாபிலோனில் இருந்தவர்களில் ஒருவர், "கர்த்தரின் பாட்டை அந்நிய தேசத்தில் நாங்கள் பாடுவதெப்படி?" என்று புலம்பினார் (சங்கீதம் 137:4).*

*பரதேசியாயிருத்தல் என்ற பாடக்கருத்து வேதாகமத்தில் ஆழமாக ஓடுகிறது. கானானுக்குள் ஆபிரகாம் அந்நியனும் பரதேசியுமாகப்*

*பிரவேசித்தார். அவர் அந்த நாட்டில் மக்களில் எவருக்கும் உரியவராக இருக்கவில்லை, அவரது மனைவி சாராள் இறந்த வேளை வந்தது. உயிருள்ளவர்கள் நடமாட முடியும், ஆனால் மரித்தவர்களால் நடமாட முடியாதே. ஆகையால் அடக்கம் செய்வதற்குரிய ஒரு துண்டு நிலம் அவருக்குத் தேவைப்பட்டது, கானானில் இருந்த குடிகளிடத்தில் ஆபிரகாம் தமது சூழ்நிலையைப் பின்வருமமாறு விளக்கப்படுத்தினார்: "நான் உங்களிடத்தில் அந்நியனும் பரதேசியுமமாய் இருக்கிறேன்; ... உங்களிடத்தில் எனக்குச் சொந்தமாக ஒரு கல்லறைப் பூமியைத் தர வேண்டும்" (ஆதியாகமம் 23:4).*

*அந்நியராயிருந்தது, சொந்தநாட்டில் இல்லாதிருந்தது பற்றிய ஆபிரகாமின் உணர்வு இஸ்ரவேல் மக்களை விட்டு ஒருக்காலும் நீங்கவில்லை. பல நூற்றாண்டுகளுக்குப் பின்பு ஆபிரகாமின் சந்ததியாரை மோசே எகிப்தில் இருந்து வெளியே வழிநடத்திச் சென்றார். வனாந்தரத்தில் அவர் தேவனிடமிருந்து நியாயப்பிரமாணத்தைப் பெற்று அவர்களுக்குக் கொடுத்தார். அதன் அளிப்புகளில் ஒன்றாகப் பின்வருவதும் இருந்தது: "தேசம் என்னுடையதாயிருக்கிறபடியால், நீங்கள் நிலங்களை அறுதியாய் விற்கவேண்டாம்; நீங்கள் பரதேசிகளும் என்னிடத்தில் புறக்குடிகளுமாயிருக்கிறீர்கள்" (லேவியராகமம் 25:23). இஸ்ரவேல் மக்கள் கானான் நாட்டில் குடியமருவார்கள், ஆனால் அங்கு அவர்கள் ஒருக்காலும் முழுமையும் இல்லிடம் கொண்டிருக்க மாட்டார்கள்.*

*தாவீதின் வாழ்வு முடிவை நெருங்கிக் கொண்டிருந்த போது, அவர் எருசலேமில் தேவாலயம் கட்டத் தயாரிப்புப் பணியை மேற்கொண்டார். அரசர் கர்த்தரை ஸ்தோத்தரித்து, பின் வருமாறு ஜெபித்தார், "உமக்கு முன்பாக நாங்கள் எங்களுடைய பிதாக்கள் எல்லாரைப் போலும் அரதேசிகளும் பரதேசிகளுமாயிருக்கிறோம்" (1 நாளாகமம் 29:15). அரசர் தமது சங்கீதங்கள் ஒன்றில், இதே சிந்தனையை ஒன்றாக உருவாக்கினார்: "கர்த்தாவே என் ஜெபத்தைக் கேட்டு, என் கூப்பிடுதலுக்குச் செவி கொடும்; என் கண்ணீருக்கு மௌனமாயிராதேயும்; என் பிதாக்களெல்லாரையும் போல நானும் உமக்கு முன்பாக அந்நியனும் பரதேசியுமாயிருக்கிறேன்" (சங்கீதம் 39:12).*

*கடந்து செல்பவர், பரதேசி, அந்நியர் என்ற வளமான பின்னணிக்குப் பின்னால், பேதுரு தமது வாசகர்களைக் குறிப்பிட்டார். இந்த நிருபத்தின் முதல் வாசகர்கள் தங்களின் விசுவாசத்தின் நிமித்தம் துன்புற்றுக் கொண்டிருந்தனர். இதன் விளைவாக அவர்கள் பின்வரும் மூன்று சத்தியங்களைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்பினார்.*

*<u>முதலாவது, தேவன் மீது விசுவாசம் கொண்டுள்ள மக்கள் இந்த உலகத்தில் ஒருக்காலும் தங்கள் நிறைவான இல்லிடத்தை கொண்டிருந்ததில்லை மற்றும் அதைக் கொண்டிருக்கவும் மாட்டார்கள்.</u> அவர்களின் வாழ்வு, அவர்களின் உயர் நோக்குகள், தேவன் மீதான அவர்களின் விசுவாசம் ஆகியவை அவர்கள் வாழும் காலங்களுக்குப் பொருந்துவதில்லையென்று அவர்கள் உணர்வு கொண்டால், அவர்கள் மாண்பு மிக்கவர்களுடன் தோழமையில் பங்கேற்கின்றனர் என்றாகிறது. இதுவே முதல் நூற்றாண்டில் தேவபக்தியுள்ளவர்களின் வழியாயிருந்தது; இது இன்றும் அவ்வாறே உள்ளது.*

*இந்த நிருபத்தின் முதல் வாசகர் வாழ்ந்த உலகமானது, நவீன உலகத்திலிருந்து வேறுபட்டிருந்ததைக் காட்டிலும் அதிகமாக அதை (நவீன உலகத்தை) போன்றதாகவே இருந்தது. ஒழுக்கவீனம் மிகுந்திருந்தது. ஒரு*

மனிதர் அடிமைப்பெண் ஒருத்தியை விலைக்கு வாங்கிய போது, அவள் அவரது உடமையாயிருந்தாள். அடிமைகள் தங்களுக்கிடையில் திருமணம் செய்து கொள்ளுதல் தடை செய்யப்பட்டிருந்தது, பல அடிமைகள் இருந்தனர், விவாகரத்து மற்றும் கருக்கலைப்பு ஆகியவை பொதுவான விஷயங்களாயிருந்தன, விரும்பப்படாத குழந்தைகள் பஞ்ச பூதங்களுக்கு இறையாக்கப்பட்டன. வன்முறை கொந்தளித்தது, பேதுருவின் வாசகர்கள் வாழ்ந்திருந்த, கிரேக்க மொழி பேசும் உலகம், அதிக உணர்வைத் தூண்டும் ரோமானியர்களின் பொழுதுபோக்கைத் தழுவிக் கொண்டிருந்தது. பொது அரங்க சாலைகளில் வாள் போர் செய்பவர்களின் காட்சிகள் அரங்கேறின. கொடிய மிருகங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. மனிதர்களுக்கு எதிராக ஏவிவிடப்பட்ட அவைகள் அவர்களுடன் சண்டையிட்டன; மிகவும் அடிக்கடி அவைகள், தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளியை எதிர்கொண்டன, அவர்களின் தற்பாதுகாப்பிற்காக ஒரு கத்தியோ அல்லது ஒரு வலையோ அவர்களின் கையில் கொடுக்கப்படும். கிறிஸ்தவர்கள் வெகு சுலபமாக சுகவீனத்தை உணர்ந்த அந்த உலகில், வன்முறை, கொடூரம் மற்றும் ஒழுக்கவீனம் ஆகியவை பரந்திருந்தன. அவர்கள் தங்களை அந்நியர்களாக உணர்ந்தனர்.

இருபத்தியோராம் நூற்றாண்டிற்கான இதன் நடைமுறைப் பயன்பாடு கடினமானதாக இருப்பதில்லை, நகரத்துத் தெருக்களில் போதை மருந்திற்கான போராட்டம் வெடிக்கிறது. ஆபாச இலக்கியம், விபசாரம் மற்றும் பாலுறவிற்காக அடிமைப்படுத்துதல் ஆகியவையும் நவீன உலகத்தில் அரிதான விஷயமல்ல. இரவு வேளை செய்தி ஒளிபரப்புகள் கிறிஸ்தவர்கள் தங்கள் தலைகளை வேதனையுடன் ஆட்டும்படி செய்கின்றன. மக்கள் கிறிஸ்துவைப்பற்றி எவ்வளவு தீவிரமாக சிந்தனையை மேற்கொள்கின்றனரோ, கிறிஸ்தவர்கள் நாசரேத்தூர் இயேசுவைப் போலிருக்க எவ்வளவு தீவிரமாக செயல்படுகின்றனரோ, அவ்வளவுக்கு அவர்கள் இந்த உலகத்தைப் பொறுத்தமட்டில் பரதேசிகளும், கடந்து செல்பவர்களுமாயிருப்பதை உணர்கிறார்கள் மற்றும் தொடர்ந்து உணர்வார்கள்.

*இரண்டாவது, பேதுருவின் வாசகர்கள் உபத்திரவத்தை எதிர்கொண்டிருந்த நிலையில், அவர்கள் தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்டிருந்ததை அறியவேண்டும் என்று பேதுரு விரும்பினார்.* தெரிந்துகொள்ளப்பட்டவர்களாயிருத்தல் என்பது, கடைக்குச் செல்லும் ஒருவர் ஒரு உடையைத் தேர்ந்தெடுக்கையில் அந்த உடை சும்மா இருப்பது போல, ஒரு செயலற்ற நிகழ்வு என்று நினைக்கலாம். தேர்ந்து கொள்ளப்படுவதற்காக ஒருவர் செயல் எதுவும் செய்யாமல் காத்திருக்கிறார். பாவியோருவர் மரணத்தில் இருந்து கிறிஸ்துவுக்குள் ஜீவனுக்கு கடந்து வருகையில், தேவனே எல்லாவற்றையும் முனைந்து செய்கிறார் என்ற கருத்தைக் கொண்டுள்ள மிகப்பரவலான உபதேசம் மார்க்க உலகத்தில் உள்ளது. தேவன் தேர்ந்துகொள்கிறார். தேவன் விசுவாசத்தைக் கொடுக்கிறார். தேவன் இரட்சிப்பை உத்தரவாதப்படுத்துகிறார். பாவியாயிருப்பவர் செய்ய வேண்டியவையாகக் கேட்டுக் கொள்ளப்படுவது எதுவும் இல்லை.

பாவங்களில் மரித்தநிலையில் இருந்து கிறிஸ்துவுக்குள் ஜீவன் பெறும் நிலைக்குக் கடந்து வருதல் என்பது முற்றிலும் செயலற்ற கருத்தா? பேதுரு இவ்வாறு நினைக்கவில்லை. 1 பேதுரு நிருபத்தை எழுதிய இதே அப்போஸ்தலர் (முன்பு) பெந்தெகொஸ்தே நாளன்று தமது முதல் சுவிசேஷப்

*பிரசங்கத்தைப் பிரசங்கித்தார். அதன் முடிவுப் பகுதிக்கு அவர் வந்தபோது, அந்தப் பிரசங்கத்தைக் கேட்ட கூட்டத்தார், தாங்கள் செய்ய வேண்டியது என்ன என்று கேட்டனர். அவர்கள் மனந்திரும்பி, தங்கள் பாவமன்னிப்பிற்காக ஞானஸ்நானம் பெறவேண்டும் என்று பேதுரு அவர்களிடம் கூறினார் (நடபடிகள் 2:38). அவர்கள் சிலவற்றைச் செய்ய வேண்டியிருந்தது. பின்வரும் தனிச்சிறப்பான கூற்றை லூக்கா கூடுதலாகக் கூறினார்: "இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சி கூறி, மாறுபாடுள்ள இந்தச் சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் என்றும் புத்தி சொன்னான்" (நடபடிகள் 2:40).* KJV *வேதாகமத்தில், "அவகேடான இந்தச் சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள்" என்றுள்ளது. இந்த இரண்டு வாசிப்புகளிலுமே, பேதுருவின் உரையைக் கேட்டவர்கள் செய்யவேண்டிய சிலவிஷயங்கள் இருந்தன என்று அவர்களுக்குப் பேதுரு அறிவுறுத்துகிறார்.*

மனித குடும்பத்தை மீட்பதற்கு தொடக்கச் செயலைத் தேவன் மேற் கொண்டுள்ளார் என்பது உண்மையே. மனிதர்கள் பாவத்தில் இழந்து போகப்பட்டிருந்த போது, அவர்கள் நம்பிக்கையற்று இருந்த போது, தேவன் செயல்பட்டார். தேவன் விசுவாசம் நிறைந்த ஆபிரகாமை அழைத்தார். அடிமைத் தளையில் இருந்த மக்களை அவர் எகிப்தில் இருந்து வெளியே நடத்திச் சென்றார். மீட்பரின் வருகைக்கு மனிதர்களைத் தயார்ப்படுத்துவதற்காக, அவர் இந்த உலகத்தைப் பண்படுத்தினார். அவர் தமது ஒரே பேறான குமாரனை அனுப்பினார். இவையாவும் உண்மையே, ஆனால் முடிவில், தேவனுடைய இந்த அழைப்பு மனிதரின் பதில் செயல் ஒன்றினால் பதில் அளிக்கப்படவேண்டும். கிறிஸ்துவினிடத்தில் வருகிறவர் முற்றிலும் செயல்படாதவராக இருப்பதில்லை, மீட்பின் செய்தியைக் கேட்கும் போது, இயேசுவே கிறிஸ்து என்று விசுவாசிக்கும்போது, மற்றும் தங்கள் விசுவாசத்தின்படி செயல்படும்போது, கிறிஸ்தவர்கள், தேவனால் தேர்ந்துகொள்ளப்படுகின்றனர்.

*மூன்றாவது, பேதுரு குறிப்பிட்ட துன்புற்ற கிறிஸ்தவர்கள், தாங்கள் பரிசுத்தமாக்கப்பட்டிருப்பதை அறிய வேண்டும் என்று பேதுரு விரும்பினார்.* தேவனுடனான அவர்களின் உறவும், இயேசு கிறிஸ்துவில் அவர்கள் பகிர்ந்து கொண்ட நம்பிக்கையும் "ஆவியானவரின் பரிசுத்தமாக்கும் செயலின்" மூலமாக வந்திருந்தது. Sanctified என்றால் made holy என்பதாகிறது. அது தேவனுக்கென்று பிரித்தெடுத்து வைக்கப்படுதலாக உள்ளது. இந்த நிருபத்தை முதன் முதலாக வாசித்த கிறிஸ்தவர்களை தேவன் தேர்ந்துகொண்டது மாத்திரமின்றி, அவர்களை அவர் தமது பரிசுத்த மக்களாகவும் ஆக்கினார்.

இழந்துபோகப்பட்ட ஒரு பாவி, சுவிசேஷத்தைக் கேள்விப்படுகிறார், அதன் செய்தியை விசுவாசிக்கிறார், மற்றும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறார், தேவன் அவரை அல்லது அவளைப் பரிசுத்தமாக்குகிறார். பரிசுத்தமாக்குதல் என்பது ஒரு நபர் தமக்குத்தாமே செய்து கொள்ளக் கூடிய விஷயமல்ல. இயேசு சிலுவையில் சிந்திய இரத்தத்தினால் தேவன் (நம்மை) பரிசுத்தமாக்குகிறார். தேவனால் பரிசுத்தமாக்கப்பட்ட மக்கள் பரிசுத்தவான்களாக உள்ளனர். அவர்கள் தேவனுடைய பரிசுத்தர்களாக உள்ளனர். பெரும்பாலான கிறிஸ்தவர்கள், "நான் பரிசுத்தமாயிருக்கிறேன்" என்று கூறத்தயங்குகின்றனர். பேதுரு இவ்விதத் தயக்கம் எதையும் கொண்டிருக்க

*வில்லை. கிறிஸ்தவராயிருத்தல் என்றாலே பரிசுத்தமாயிருத்தல் என்றே அர்த்தமாகிறது. புதிய ஏற்பாட்டில் உள்ள மற்ற எல்லாப் புத்திமதிகளையும் போலவே, பேதுருவின் புத்திமதியும் பின்வருவதாகவே உள்ளது: தேவன் உங்களைப் பரிசுத்தமாக்கியுள்ளபடியால், அதன்படியே நீங்கள் பரிசுத்தமான மக்களைப் போன்றே வாழுங்கள். பரிசுத்த தன்மை என்பது மனிதத் தகுதியைச் சார்ந்திருப்பதில்லை. இருப்பினும் விசுவாசம் நிறைந்த வகையில் வாழுதல் என்பது, விசுவாசம் நிறைந்த பதில் செயலைக் கேட்கிறது. இதைப் பவுல் நன்றாகக் கூறினார்: "நியாயப்பிரமாணத்தைக் கேட்கிறவர்கள் தேவனுக்கு முன்பாக நீதிமான்களல்ல, நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறவர்களே நீதிமான்களாக்கப்படுவார்கள்" (ரோமர் 2:13).*

*தொகுப்புரை:* இரண்டாயிரம் ஆண்டுகளாகக் கிறிஸ்தவர்கள், தேவபக்தியற்ற மக்களின் எதிர்ப்பை எதிர் கொண்டுள்ளனர். சிலவேளைகளில் உபத்திரவம் என்பது மற்றவற்றைக் காட்டிலும் உடல்ரீதியாக அதிகமானதாக உள்ளது; சிலவேளைகளில் இது அதிகம் மனோரீதியானதாக உள்ளது. அது எப்போதுமே உள்ளது. பேதுரு தமது வாசகர்களுக்கு, எதிர்ப்பிலிருந்து தப்பிக்கொள்ளும் புகலிடம் எதையும் வாக்குறுதி அளிக்கவில்லை. அவர்களிடம் அவர் பின்வருமாறு விவாதித்தார்: (1) கிறிஸ்தவர்கள் உபத்திரவப்படும்போது, தேவனுடைய பரிசுத்தவான்களின் நீண்ட வரிசையில் நிற்கின்றனர். இந்த யுகத்தில் கிறிஸ்தவர்கள் தங்கள் இல்லிடத்தில் இருத்தல் கடினம் என்பதைத் தேவனுடைய மக்கள் எப்போதும் புரிந்து கொண்டுள்ளனர். அவர்கள் இந்த உலகத்தில் பரதேசிகளாக, கடந்து செல்பவர்களாக, அந்நியர்களாக இருக்கின்றனர். (2) அவர்களைப்பற்றி இந்த உலகம் நினைப்பது எதுவாக இருப்பினும், அவர்கள் தேவனால் தேர்ந்துகொள்ளப்பட்ட மக்களாக இருக்கின்றனர். (3) தேவன் அவர்களைப் பரிசுத்தராக்கியுள்ளார்கள். அவர்கள் பரிசுத்தமாக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் பரிசுத்தமாக்கப்பட்டிருப்பதால் பரிசுத்தமான வாழ்வை வாழவேண்டும்.

**குறிப்புகள்**

[1]*உபாகமம் 32:30, 31; சங்கீதம் 18:2, 31, 46; 19:14; 28:1; 31:2, 3; 42:9; 62:2, 7; 71:3; 78:35; 89:26; 92:15: 94:22; 95:1; 144:1.* [2]"ஆவியானவர்" என்ற வார்த்தை இலக்கணரீதியாக கிரேக்க மொழியில் ஆறாம் வேற்றுமைத் தொகையாக உள்ளது. இது தனிப்பட்டவகையில் ஆறாம் வேற்றுமைத் தொகையாக உள்ளது. [3]A. M. Toplady, "Rock of Ages," *Songs of the Church,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1977). [4]J. Ramsey Michaels, *1 Peter*, Word Biblical Commentary, vol. 49 (Waco, Tex.: Word Books, 1988), 12. [5]*பர்ட்டன் W ஸ்டோன் அவர்கள் The Christian Messenger என்ற தமது பத்திரிகையில் பல்வேறு வேளைகளில், திரித்துவம் என்ற கருத்தைப்பற்றி விவாதித்துள்ளார். 1830 ஜுலை இதழில் (169-173) உள்ள கட்டுரை குறிப்பிடத்தக்கதாகும். திரித்துவம் பற்றிய ஸ்டோன் அவர்களின் நிலைபற்றி ஒரு தொகுப்புரையை பின்வரும் புத்தகத்தில் காணவும்:* James DeForest Murch, *Christians Only: A History of the Restoration Movement* (Cincinnati: Standard Publishing, 1962), 92. [6]Paul S. Minear, "Holy People, Holy Land, Holy City: The Genesis and Genius of Christian Attitudes," *Interpretation* 37 (January 1983): 28. [7]I. Howard Marshall, *New Testament Theology: Many Witnesses, One Gospel* (Downers Grove, Ill.: InterVarsity Press, 2004), 644.